உ

திருச்சிற்றம்பலம்.

சீகாழிச் சிற்றம்பலநாடிகள்

ாத்திரக்கொத்து

தலைமைப்பண்டிதர்

சே. வெள்ளியம்பலம்பிள்ளையவர்கள் குமாரர்

சே. சிவஞானம்பிள்ளையவர்கள்

விருப்பத்தின்படி,

திருமயிலை - வித்வான்

சண்முகம்பிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டு,

நே. முருகேச முதலியாரவர்களால்

தமது

சென்னைப் புரசை

“கணேச” அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

உ

சிவமயம்.

அட்டவணை.



னர். இவர் தம்மைப் பெற்றோர் சுக்கில பக்கத்துச் சந்தி ரன்போல் வளர்க்க வளாநது தக்கவயதுநிரம்புதற்குள் ங்கண்டு கற்று இலக்கியம் இலக்கணம் தருக்க முதலிய கருவிநூல்கள் பயின்று சிற்சபையிலற்புத நடஞ்செயு மாண்டகை நீண்ட பூங்கழற்க ணன்புடைமை முற்பிறப் பிலுடைமையாற் பதி பசு பாச மென்னு முப்பொரு ளுணாசசியுடைய ராயினர்.

இவ ிருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாத முடையராக விளங்கலாற் சுத்தாத்துவித வைதிக சைவ பரமாசாரிய சிகாமணியாகிய பொய்கண் டகன்ற மெய்கண்ட தேசிகர் மரபிடை யருளுபதேசம் பெற் மசு சிறந்து சிவாநுபூதிச செல்வராய் வீற்றிருந்தனர். இவர்பா லருளுபதேசம் பெற்றுச் சிறந்தா ரெனைப்ப ார். இவருளொரு திருக்கூட்டமாகச் சேர்ந்து அடிக சூழ்வ லன்புடைய ராகிச் சிவாநுபூதிமான்க சிறந்தார் அறுபான் மூவர் அவர் தத்துவப் ானப் பிரகாசர், கண்ணப்பர் முதலாயினோர். மாருங் கெய்திக் கவுரிமாயூரத் தண் மடாலயத் தெழுந்தருளிச் சிவபூசை, ியன நடத்தி வந்தனர்.

இவ்வாறிருக்கையி லொருநாள் அடிகளும் அடியரும் வழக்கம்போற் றிருவமுது மிசைந்தனர். அதுபோழ்து பரிசாரகன் வேப்பெண்ணெயை ஆனெயென வுணராமே யெடுத்தவருண்ணு மன்னத்திற்பெய்தனன் அடிகள் முதலானோரும் ஒரு விகற்பமு மில்லாது விழைந்து அமுது கொண்டனர். அவருளொருவராகிய கண்ணப்பர் சற்றே விகற்பமெய்திப் பரிசாரகன் அன்னத்திற் பெய்தது வேப்பெண்ணெயென் றுணர்ந்து எண்ணெயினை விட்டுப் பிசைந்த பருப்பன்னமுண்ணாது கவன்று 'வே'யென்றேக்காரித்தனர். அதனையுணர்ந்த அடிகளும் "நமது திருக்கூட்டத்தே பக்குவ மில்லாதாரு மிருப்பது தகுதியோ' எனக் கட்டளை யிட்டனர். அதனைக் கேட்ட கண்ணப்பரும் உடனே இம்மென்றெழுந்து அப்பந்தியினின்று நீங்கிப் போந்து தமதடிக ளடிகளைச் சிந்தனையி னிடைவிடாது சிந்தித்துக்கொண்டே வடக்கணோக்கிச் சென்றனர்.

இவர் சென்ற சின்னாட்பின்னர் அடிகளும் தம்மடியரோடுஞ் சித்திரை மதியிற் றிருவோணநாளிற் சமாதியினிறங்குவதாக அந்நாளிற் பொன்னிநதிக் கடுத்த சென்னிநன்னாட்டினை யரசாண்டுவரும் அரசனைக் கூயறிவித்து

நூலாசிரியர் வரலாறு.

அதற்குத் தக்கஇடம் அமைக்க வெனக்கட்டளை யிட்டனர். அரசனே கழிபேருவகையெய்தி அக்கௌரி மாயூரத்தில் கண்மையாகிய பூம்பொழி லொன்றில் அவ்வடிகள் கட்டளையிட்டாங்கு அடிகட்கொரு சமாதியும் அடியா அறுபானிருவருக்குமத்துணைச்சமாதியுமமைத்து அடிகட்கு விண்ணப் பித்ததனறி இச்சிறந்த செய்தியை உலகமெங்கும் அறியப் பறை சாற்றுவித்தனன்.

இவ்வதிசயங் கேட்டாங் கனைவரும் குறித்த நாளில் அப்பூம்பொழிலையடைந்து யாது விநோத நடக்குமோ காண்பேமென் றெதிர்பார்த் திருந்தனர். அரசனே அப்பூம்பொழிலை யொப்பனை புனைந் தடிகளடிகளை வணங்கி விண்ணப்பித்தனன். இறைவனோடு புக்கொடுங்குங்கால நேர்ந்தமையான் அடிகளும் தம்மடியருடன் அப்பூம்பொழிலை யெய்திக் காணவந்தார் யாரையும் திருவருட் கண்ணானோக்கி யாசிர்வதித்து யாவருங்கேட்பத் திருவெண்பாக்கள் மூன்றனை யருளிச்செய்து தமக்கென்றமைத்த சமாதியி லிறங்கிச் சிவத்தியானத்தோடு சின்முத்திரையாகிய மோனமுத்திரை தாங்கி நிலவினர் பின்னர் அடிய அறுபா னிருவருந் தனித்தனி யொவ்வொருதிருவெண்பாப்பாடிக் கொண்டே தம்மடிக ளடிகளைத

ணஞ் செய்துகொண்டு மும்முறை வலம் வந்தெட்
டுறுப்பு நிலமுறப்பணிந்து தந்தமக் கமைத்த சமாதியி
லிறங்கிச் சித்திபெற்றனர்.

இவ்வாறு நிகழு மதிசயம் அரசனும் பலரும்
வியப்புற்று இப்பெற லருஞ்செல்வம் இக்கூட்
டத்திற் சேர்ந்தவடியவ ரொருவரெய்தப் பெறாதி
லரே! அவரெங்குற்றனரோ! யாண்டுள்ளாரோ! அவ
ரிச்செய்தி யுணர்வரோ! எனப்பலபடப் பேசிக் கவல
கொண்டனர். அவ்வமையத்தில் வடக்கட் சென்ற அடி
யர் தற்செயலா யாண்டுத் தோன்றித் தமக்கென்றொரு
சமாதியமைக்கப் படாமையா லாங்குள்ள வெல்லாச்
சமாதிகளையும்மும்முறைவலம்வந்துவணங்கித்தம்மடிகள்
சமாதியை நாடி யாராவன்பு மீதூர்ந்து கண்ணீருங் கம்ப
லையுமாய் நெஞ்சநெககுநெக்குக கசிந்துருகி நின்று; 'ஆ
ண்டகாக சிற்றம் பலவாவடியேறகா - மீண்டும் பிறக்க
ல் வேண்டாவோ' எனக் கூறி நின்றனர். உடனே அ
ச்சமாதி பிளவுபட அடிகள் விழித்து நோக்கி எதிர்
கூப்பிய கையராய்க் கவலைகொண்ட கண்ணப்பரை யிரு
கையாரத்தழீஇக்கொண்டு தமது மடிமேலிருத்தி ஐக்கி
யஞ்செய்து கொண்டனர். இவர் பெற்ற பேறேபேறு.

இவர் பெற்றது யாரினுஞ் சிறப்புற்றதெனக் கண்டார யாவருங்கழறித் தத்தமிருக்கையை யடைந்தனர். அரசரேறு அச்சமாதிக் கட்டடங்களை யெல்லா மேலே விதானித்துத் திருத்திப் பூசனை நடத்த வமைத்துச் சிவப பேறுற்றுச் சிறந்தனன. இதனுண்மை பின்வருமபியுத்தர் செய்யுளா னறியலாம். அது "முத்தராறுபத்து மூவர பணிந் தேத்தும், சித்தர் வனந்தில்லைச் சிற்றம்பலவா பத்தர், பவவிருளை நீக்கியருள பானுவேதுய்ய, தவ வடிவே நின்றாள் சரண்." இக்கவுரிமாயூரத்திற் கடுத்த இவர் சமாதி யமைந்த பூம்பொழிலைச் சித்தர்வனமென றும், சித்தக் காடென்றும் இன்னும் வழங்குகின்றனர்.

இச்சாத்திரக் கோர்வை யடங்கிய நூல்கள் செல்காலத்திரங்கல், நிகழ் காலத்திரங்கல், வருகாலத்திரங்கல், அநுபூதிவிளக்கம், தாலாட்டு, கலித்துறை, மூறுவல் துகளறுபோத மெனபன. இவ்வடிகளும் அடியவரும் சமாதியடையும்போது சிற்றம்பலநாடிகள் மூன்று வெண்பாவும் ஏனையோர் ஒவ்வொரு வெண்பாவும் பாடியதாகத் தோன்றுகின்றது. திருச்செந்தூர் அகவலையும் இவர் செய்ததாகச் சிலர் கூறுப. இப்பெயரினர் வேறிருவருளர். அவ பெரியபழுதைச் சிற்றம்பல நாடிகளும், சிறுபழுதைச் சிறறமபலநாடிகளு மெனப்படுவர்.

முகவுரை.



யான் சிற்றம்பல நாடிகளும் அவரடியரும் பாடிய இவ்வரிய பெரிய நூல்களடங்கிய திரட்டொன்று வெகு காலத்திற்குமுன் கிடைக்கப் பெற்றேன். அதன் சார போதும் எனக்கும் அவ்வடிகள் மரபிற் சாம விசேட தீக்கைகள் கிடைக்கப்பெற்றன. இப்பரம்பரை சீகாழி, மாயூர மென்பனவாய சோணாட்டுத் திருப்பதி களினின்றுந் திருத்தொண்டை நாட்டி லெம்மையாளு டைய அறப்பெருஞ் செல்வி எண்ணான் கறமும் புரிந் திறைவனை வளைச்சுவட்டாலுந் தனச்சுவட்டாலும் இறுகச் செய்த தவக்கோட்டத்தினும் சத்தபுரிகளி லொன் றாய விலங்கிய காஞ்சி நகரத்தில் ஞானப்பிர காச ராமினையென இறைஞானேன்று மிருக்கின் றது. அங்கு மகா குருபூசை சித்திரை மாசத் திருவோண நாளிற் பிரதிவருடமு நடந்தேறி வருகின் றது. அவ்வாதினத்தின் முன்னிருந்த மகாசந்நிதானம அடியேனை நோக்கிக் கடைக்கணித்து நம்முடைய ஆதி னப் பெருஞ் செல்வமாகிய இச்சிற்றம்பல நாடிகள் நூல்களனைத்தும் அடியேன்பாற்கொடுத்து அச்சிட் டுபகரித்த லுனக்குக் கடனாமெனக் கட்டளையிட் டிருந் தார்கள். கல்வியிலுஞ் செல்வத்திலும் வறியனாகிய யான் இப்பெருங் காரிய மெவ்வாறு செய்யப்பெறுவே

கருதியிருக்கையிற் பிரதிகள் சில கிடைத்துத் திருத்த முஞ் செய்ய முயன்றேன். துகளறுபோத மொன்றே திருத்தலைக்கு மிகச்சாலச் சிரமந் தந்தது. சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தமிழ்ப் பண்டிதராகிய நாகை. வேதாசலம்பிள்ளை யவர்கள் சிற்றுரையொன்றெழுதிவி டுத்த ஒருபிரதி கிடைத்தது. அவ்வுரையோ மிகச்சுருக்கி யெழுதி யிருக்கின்றது. இதனிற்க ; வடநூற் கடலையும் தமிழ் நூற் கடலையு நிலைகண்டுணர்ந்த திராவிடமாபாடிய காரராகிய திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துச் சிவஞான யோகிகளே ஆங்காங்குக் காட்டாகக் காட்டிய இவ்வரிய பெரிய சாத்திரத்தை யெவ்வாறு வெளியிடுவதெனக் கருதியே யிருந்த வெனக்குத் திருநெல்வேலி - வித்துவான் - பால்வண்ண முதலியா ரவர்கள் தென்னாட்டிற் பல பிரதிகளையுங்கொண்டு பரிசோதித் தச்சிட்டுதவிய பிரதியுங் கிடைத்து என் பிரதியோடு ஒத்திட்டு அச்சிட முயன்றேன்.

இதனை யெவ்வா றச்சிடுவதென்று கருதியிருந்த வெனக்குப் பரோபகாரசிந்தையுடன் சென்னைப்புரசையிற் பெண்களுக்கு இந்துமதபோதனை போதிக்கு மிடத்தும்

முகவுரை.

சைவப்பிரபு - நே. முனிசாமி முதலியாரவர்கள் ஜெ பாடசாலைப் பரிபாலனத்திற் கென்றமைத்த தமது கணேச அச்சியந்திர சாலையிற் றமது சொந்தச் செல விலேயே அச்சிட்டுத் தருவதாக வாக்களித் தவ்வாறே முடித்துங் கொடுத்தார்கள். அவர்கள் செய்தநன்றிக்கு யான் மறுமைக்கு மாறுதவிசெய்வா ரில்லதுபோற் கருத வேண்டுவதன்றி யான்செயற்பால தொன்றுமின்று. எனக்குப்பிரதியுதவினவர்கட்கு என்மனமாரவந்தனஞ் செலுத்துகின்றேன். யான்இச்சாத்திரக்கொத்தினை யச்சிடுகையில் என்னோடு பிரதிகளையொத்திட் டச்சிட வுதவியாயிருந்த - கவர்ன்மெண்டு பெண்கள் கல்விச் சாலைகளில் சென்றல் சர்க்கில் இன்ஸ்பெக்டரஸ் தலைமை லிகிதர் சே. சிவஞானம் பிள்ளைக்கும் என்ன கைம்மாறு செயற்பாலேன். இவ்வரிய பெரிய சாத்திரத்தை, யானச்சிடக் கருணைசெய்த முழுமுதல்வன் திருவருளை வணங்குகின்றேன்.

இங்ஙனம்,

தி. சண்முகம் பிள்ளை.

பிரதிகள் கொடுத்தோர் பெயர்.

பிரதி எண்

என்பாலிருந்த பிரதி 1.

காஞ்சி. ஞானப்பிரகாச நாயினார் 1.

தி. கோதண்டசாமி பிள்ளை அவர்கள் 1.

திரிசிரபுரம், ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
தி. ஆறுமுக நயினார் அவர்கள். 1.

துகளறு போதம்-திருநெல்வேலி வித்துவான்,
பாலவண்ண முதலியார் அவர்கள். 1.

துகளறு போதமும் சிற்றம்பல நாடிகள்
வெண்பாவும், சென்னைக் கிறிஸ்தவ கலா
சாலைத் தமிழ்ப்பண்டிதர் நாகை. வேதா
சலம் பிள்ளை அவர்கள். 1.

இங்ஙனம்,

தி. ச.

உ

திருச்சிற்றம்பலம்.

சீகாழிச் சிற்றம்பலநாடிகள்

அருளிச்செய்த

சாத்திரக் கொத்து.

முதலாவது,

செல்காலத்திரங்கல்.

சீரார் திருநீறுந் திலகருள் வேடமுமுன்
சேராமலையோ தெளியா திருந்தனனே (1)

வந்து பிறந்ததிந்த மானிடராய் மண்ணின்மிசை
யெந்தைபணி செய்வதற்கென் றெண்ணா திருந்தனனே.

திருக்கோயில் சூழ்ந்து சிவனுருவங் கண்டு
மருட்கோல மாற்றுமன் மாண்டு திரிந்தனனே. (3)

ஞானமு மாமலரு மாருத் திருவிளக்குஞ்
ஞசடையோற்கென்றென் றுஞ்செய்யாதிருந்தனமே.

மைபயவி சேட மவுத்திரிமூன் கொள்ளா
மையில் விடையத் தழிந்து திரிந்தனமே. (5)

அனைறே சிவனுரை யாதரவாய்ப் பூசித்த
னமேற வினைப்பிறப்பி லீடழிந்து விட்டனமே. (6)

ஆகா யோக நிராதார யோகமெனுஞ்
நான மில்லாமற் சூழுந்து பிறந்தனமே. (7)

னெழுத்திட் டென்று மொழியாத வீடுதரு
னகுரு சேவனுமென்று நாடா திருந்தனமே. (8)

அருவாகி நின்ற வரனு குருவாகிப்
நுவா யிருந்ததல் குறியா திருந்தனமே. (9)

தகுறு தேசிகனைச் சிந்தை மகிழ்ந்துருகி
சித்தப் போற்றுமற் போதவமே போக்கினமே. (10)

மாருத மாக்கருணை மானிடர்போல் வந்திருக்கப்
பேருகப போற்றுயற் பேதழிந்து விட்டனமே. (11)

இனறுபோ லன்றே யிறைவனார் கண்மலரால்
ன்றுவினை போக்காமல் கிட்டோனு செய்தனமே. (12)

அங்கமலத் தானிரண்டு மன்றோ கலைகளொடு
பொருங்குமலம் போககாமற் புலனைவழியேபோக்கனவே

பூத வுடபபு பொருளல்ல வென்றுணர்ந்த
போதந் தன்னைமுன்னே பொருந்தியிடப் பெறுமே.

மனுதிமுதல் வாயு மறந்திருந்த வாழ்வை
யனுதியே காணு தவமே யுழன்றனமே. (15)

ஒன்றுமே பொறிபுலனை யோயா திருந்தவினை
மன்றருந்த வெல்லா மகன்றிருக்கப் பெறவிலமே (16)

ஆணவத்தை நீக்கி யறிவில விழித்தனைக்
காணவைத்த வன்றுமுதல் காணு தலைந்தனமே. (17)

என்னறிவு கண்டிங் கிருட்டத்த விவரிப்பு
முன்னமறி யாதலங்கேதம் முப்பாக்கமே வைவோ. (18)

அறிவுக் கறிவாகி யாதார மாகிப்
பிறிவைக் கரிதாம்பே றிகொடுபோனை பெறவாரே. (19)

பார்க்க வரிதாம் பரவறிவின் றன்மை நமை
யேற்கவே கண்டுகொண் டின்புற் றிருந்திலமே. (20)

எல்லா வறிவு மிழந்தவிடத் துள்ளவினை
மலலாத பாவியே னென்றே யறிந்திலமே (21)

வானுந்து தேவறியா பாமலாத்தாள் வாழ்த்தியன்றே
யானந்தத் தேனை யருந்துதற்குப் பெற்றிலமே. (22)

உள்ளும் புறம்பு மொழியாத வானந்த
வெள்ளத் தழுந்தாமல் வினைநாள் விட்டனமே. (23)

பேரா சிவானந்தத் தேனருந்தி வாழ்வதறுகுத்
தோராம லிங்கெடுநாள் தீவினையில மூழ்வதே. (24)

எண்ணரிய பேரின்ப மிப்போது போலமுன்னும
நண்ணி யருந்தாமல நாளவமே போக்கினமே. (25)

கண்டவிட மெல்லாங் கலந்த பரமசுகங்
கொண்டிருந்து வாழாநாள் கொன்னே கழிந்தனவே

எல்லாமு முதநியினின் றென்னைமே விட்டசுக
சில்லாம லிங்கெடுநாள் நிலலாம னின்றனமே. (27)

சேரச் சிவபுரங் தெளிவுந் தெளிந்தவிந்த
கேரம்போல் முன்னுரு நின்றுவிடப் பெற்றிலமே. (28)

நில்லாத நெல்லாம நிலையென்று நெஞ்சில்வைத்துச
சொல்லாத பேரறிவு சொல்லாடப் பெற்றிலமே. (29

ஆகாப் பொருள்தேடி யாம்பொருளைக் கைவிட்டுப்
போகா வுடல்தோறும் புக்குழன்று விட்டனமே. (30

முத்திநெறி யில்லாத மூர்க்க ருடன்கூடி
யத்தனடி யாரடியை யாதரிக்கப் பெற்றிலமே. (31)

ஈன்றாள் முதலாக வெவ்வுறவும் போற்றிசெய்து
சான்றோர் திருவடியைச் சார்வதற்குப் பெற்றிலமே.

நெஞ்சமுழுத்த மாகவே நிட்டூரம் பேசிமிக
வஞ்செழுத்தும் வெண்ணீறு மாதரிக்கப் பெற்றிலமே.

புரையுடைய சிந்தைப் புலைய ருடன்கூடி
யரனடியார் கூட்ட மணுகுதற்குப் பெற்றிலமே. (34)

போதமிலா ரோடே பொருந்தக் கலந்துமிக
வேதமுடி வாரை விளம்புதற்குப் பெற்றிலமே. (35)

பேயான பொய்ச்சமைய பேதந் தனிலுணர்ந்து
வாயார வாகமத்தை வாழ்த்துதற்குப் பெற்றிலமே. (36)

பொய்கண் டகலாத போதமிலோ மிந்நெடுநாள்
மெய்கண்டான் சந்தான மேவுதற்குப் பெற்றிலமே.

பொங்கும் பவத்தொடர்ச்சி போக்குதற்கு முன்னமே
கங்கைநகர் மெய்கண்டான் காற்கமலம் பெற்றிலமே.

தீரா மலமனைத்துந் தீர்ந்திருக்க விந்நெடுநாள்
சீராரு மெய்கண்டான் சேவடிகள் பெற்றிலமே. (39)

அச [illegible] பூசக வன்றே யருளுருவாய்ச
[illegible] மெய்கண்டான் [illegible] பெறவிலமே.

[illegible] வொ[illegible]பிலருள மெய்கண்டா
[illegible] ளுருவா யாணடருளப் பெறறிலமே. (41)

[illegible] மெய்கண்டான் செங்கமலை தாளிரண்டி
[illegible] பூசிக்க வனறே யறிநதிலமே. (42)

[illegible] னைகுறிரு மேனிதனைப
[illegible] வனறே பூசிககப பெறறிலமே. (43)

[illegible] யாப பாபோக [illegible] தன்னில
[illegible] லொட ஞானகநது விட்டனமே. (44)

[illegible] குருபா [illegible]
[illegible] யணாவொன [illegible] வறிநதிலமே. (45)

[illegible] வினப வெழிறகுரவா மேனிதனைக
[illegible] கணடிருக்கப பெறறிலமே.

[illegible] சொலைதனை சொலலாலே சொனனாசொ
[illegible] செவிகளினு லெபபொழுதுங கேட்டிலமே

இசா[illegible] மாறறு மெழிற்குரவா [illegible]
[illegible] பனறே பரிசிககப பெறறிலமே. (4?)

களித்த திருஞான கண்ணு லருந்தி
யளித்ததனை யன்றே யருந்துதற்குப் பெற்றிலமே. (49)

ஆக்காப் பதத்தி லருமணத்தை யாதரித்து
மூக்கான் முகருதற்கு முன்னமே பெற்றிலமே. (50)

காயா யருள்சுரந்த தம்பிரான் றாளிணையை
வாயார வன்றே வழுத்துதற்குப் பெற்றிலமே (51)

போதநான் செய்துவந்த பொல்லா வினைதீர
நாதனு ரேவல நடப்பதற்குப் பெற்றிலமே. (52)


மெய்யணைய வந்தருளு மெய்கண்டான் மேனியன்றே
கையிணைகள் கூப்பிக் கசிந்துருகப் பெற்றிலமே. (53)

நிலையாம் பொருளில் நிறுத்துங் குருவைத்
தலையால் வணங்காமற் றாழ்வுசெய்து விட்டனமே. (54)

செல்காலத்திரங்கல் - முற்றும்.

இரண்டாவது,

நிகழ்காலத்திரங்கல்.



உன்னரிய ஞான முருவாக வந்தருள
வென்னதவஞ் செய்தேமுன் னியாமென் றறிந்திலமே.

ஆண்டருள வேணுமெனு மாசையோ நல்லறமோ
வேணாடி யெமையாள மெய்கண்டார் வந்ததுவே. (2)

ஏழரசெய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டு
மீட்சி நரவெமக்கு மெய்கண்டார் வந்ததுவே. (3)

வாரீர் சிவனடியார் வாராமல் வந்தவரைப்
பாரீர் பரததின் பரிணாமந் தன்னையுமே. (4)

இப்படியே யிப்படியி லென்போ லிருப்பதுவே
யப்படியே யந்த வகண்டபரி பூரணமே. (5)

பேராத வின்பப் பெருமா னுருக்கொண்டு
வாராமல் வந்துதிரு வார்த்தை யுரைப்பதுவே. (6)

கல்லா னிழலிருந்து கைம்மலரால் நால்வருக்குச்
சொல்லாத சொல்லதனைச் சொல்லுதற்கு வந்தவா. (7)

அறுபத்து மூவர்க்கு மன்றன்று வந்தா
ருறுமுத்தி சேர்வார்கட் கோருருவாய் வந்தவா. (8)

சீரார் மறையுஞ் சிவாகமமுஞ் செய் நூலு
மோரா வுணர்வு மொருமொழியாய்த் தந்தவா. (9)

அரிபிரமர் காணாத வாநந்தத் தேனைப்
பருகிப்பரு காதருந்தப் பான்மொழியாய்த் தந்தவா.

தோன்றும்பொழுதெல்லாஞ்சுகவடிவேதோன்றுதற்குத்
தோன்றும் பெருமாள்தஞ் சொல்லாலே சொன்னவா.

பஞ்சமலந் தீர்ந்த பரம சுகந்தன்னைக்
கிஞ்சுகவா யாலே கேளென்று சொன்னவா. (12)

போதளவுங் காணமற் புல்குஞ் சுகந்தன்னைச்
சீதள வாயாலே தெளிவதற்குச் செப்பியவா. (13)

நாயின் கழுத்தினுக்கு நல்லாரம் வாய்த்ததுபோல்
தீயவினை யேனருந்தத் தெள்ளமுதந் தந்தவா. (14)

வேதன்மால் காணாத மெய்கண்ட நாதனார்
பாத நாங்காணப் படிமிசையே வந்தவா. (15)

மெய்கண்ட நாதனார் மேதினிமேல் வந்தருளக்
கைகண்டோம் வீட்டின்பங் காட்சி யறக்கலந்தே. (16)

தீராத பொய்யவித்தை தீருமாந் தீர்ந்ததற்பின்
ஓரா வுணர்வுடம்பா யொன்றுபட நின்றவா. (17)

குருவொழிந்து தெய்வங் குவலயத்திற் கொள்ளார்
இருவ ரறியாத விறைநிறைவி லெய்ந்தவா. (18)

காணீர் திருமேனி கண்ணாரக் கண்குளிரப்
பேணீ ரவர்பதத்தைப் பேசீ ரவர்புகழே. (19)

அண்டங் கடந்த வறிவுருவைப் பாருங்கோள்
தொண்டர் புடைசூழ்ந்த சோதிதனைப் பாருங்கோள்.

ஆனந்த நாட னருளமேனி பாருங்கோள்
தேனுந்து வாயாரச் செப்புதலைக் கேளுங்கோள். (21)

எண்ணாத வின்ப விறையுருவைப் பாருங்கோள்
நண்ணால வினைதீர்த்த காரணரைப் பாருங்கோள். (22)

வாக்கிறந்த வின்ப வடிவதனைப் பாருங்கோள்
நோக்கரிய நோக்குடைய நுண்ணியரைப்பாருங்கோள்

திருமா லயனறியாத் தேசிகரைப் பாரும்
கருமா லொழித்தாண்ட காற்கமலம் பாருமே. (24)

செய்தற் கரியதவஞ் செய்தாலுந் தேவர்கட்கு
மெய்கம் கரியபிரா னெய்தியவா பாருமே. (25)

நீரா மலங்கெடுத்த சிற்பரரைக் காணுங்கோள்
வாரா வருளருள வந்தவரைக் காணுங்கோள். (26)

பிறவா நெறிகாட்டும் பிஞ்ஞகரைக் காணு
மறவாத பேரின்ப மைத்தவரைக் காணுமே. (27)

மண்ணிற் பிறந்து வருந்தாமை வான்கருணை
கண்ணிற் பணிவித்த காரணரைக் காணுமே. (28)

வேறு.

அல்ல லறுத்தமை பாரீர் அண்ண லிருந்தமை பாரீர்
சொல்லை விடுத்தமை பாரீர் சோதி யெடுத்தமை பாரீர்

மாயை கழன்றமை பாரீர் வல்வினை விட்டமை பாரீர்
தூய வழிவரைப் பாரீர் தோன்றாத துணைவரைப்பாரீர்

என்னை யளித்தமை பாரீ ரென்னுள் இருந்தமை பாரீர்
தன்னை யளித்தமை பாரீர் தகைவற நின்றமை பாரீர்

பூதங் களைந்தமை பாரீர் பொய்புரை மாண்டமைபாரீர்
நாத மொழிந்தமை பாரீர் நாமற நின்றமை பாரீர். (32)

ஆசை யகன்றமை பாரீ ராணவம் விட்டமை பாரீர்
தேசு நிறைந்தமை பாரீர் தேசிகர் தேசமை பாரீர்.

வாதனை போனமை பாரீர் வாழ்வுபொய்யானமை பாரீர்
பேதைமை பேர்ந்தமை பாரீர் பேதைமை போனது பாரீர்.

உருவ மிறந்தமை பாரீ ருணர்வுரு வானமை பாரீர்
அருவ மிறந்தமை பாரீ ரானந்த மானமை பாரீர். (35)

போத மிறந்தமை பாரீர் பூரண மானமை பாரீர்
வேத முடிவரைப் பாரீர் மெய்கண்ட நாதரைப் பாரீர்

ஆகம சீலரைப் பாரீர் அம்பல வாணரைப் பாரீர்
ஏக னனேகனைப் பாரீர் இன்ப வுருவனைப் பாரீர். (37)

அறிவுக் கறிவனைப் பாரீ ரறிவுக் கதீதனைப் பாரீர்
செறிநைக் கினியனைப் பாரீர் தேசிக தேவனைப் பாரீர்

சேரப் படைத்தமை பாரீர் சேர வளித்தமை பாரீர்
தீரத் துடைத்தமைபாரீர் செய்யாச்செயலனைப்பாரீர்.

உள்ளும் புறம்பனைப் பாரீ ரொருதன்மையாளனைப்பாரீ
தெள்ளத் தெளிவனைப் பாரீர் தேறலிற்றேறனைப்பாரீர்

சுட்ட விருந்தமை பாரீர் சுட்டற நின்றமை பாரீர்
கிட்ட வெளியனைப் பாரீர் கேளிரிற்கேளனைப்பாரீர் (41)

கருணை யுருவனைப் பாரீர் கண்ணரு ளாளனைப் பாரீர்
இருண்மல மற்றமை பாரீ ரின்புற் றிருந்தமை பாரீர்.

எலலாமபொய்யானமைபாரீ ரின்பமெய்யானமைபாரீர்
சொல்லாத சொல்லைப்பாரீர்சொல்லற்றசோதியைப்பாரீர்
சிவமொளிந் தற்றமை பாரீர் சேர்ந்து கலந்தமை பாரீர
நவமொழிந் தூற்றமை பாரீர் நாமவ ரானமை பாரீர.

வேறு.

இபபோது கண்ட விறையறிவு மென்னுயிருக்
கபபோது மாதார மாகியவா கண்டனமே. (45)

செபபரிய வுண்மைச் சிவஞான தேசிகரா
யிபபடியே வந்திங் கிருந்த ததிசயமே. (46)

தேன்றரு மானந்தச் செங்கமலத் தாளருள
மானிடர்போன் மண்ணின்மிசை வந்த ததிசயமே. (47

மன்று மருவுருவா யெங்கு நிறைந்தவர் தாம
இன்றெமக்குத தேசிகரா யேய்ந்த ததிசயமே. (48

போகருவர வற்றிருக்கும் பூரணர்தா மண்ணின்மிசை
யாகசையுடன் வந்த தறவு மதிசயமே. (49

எங்கு நிறைந்தவர்தா மேக வுருவாகிச்
செஙகமலத தாள்வழங்கச் சேர்ந்த ததிசயமே. (50

நிகழ்காலத்திரங்கல் - முற்றும்.



மூன்றாவது,

வருகாலத்திரங்கல்.

தோன்றி மறையுமிந்தத் தொல்லுலகு தோன்றாம
லான்ற வறிவுதா னாய்விடுவ தெக்காலம். (1)

ஆராணைமால் காணா வறிவா யகண்டமுமாம்
பூரணத்துக் குள்ளே புகுவதினி யெக்காலம். (2)

கனவு நனவென்று காணாமல் மெய்யி
னினைவு கனவற திருப்பதினி யெக்காலம். (3)

தேவகமமா யசாணாத வேறற்ற வீட்டின்பம்
போதகமாக் கொண்டு புரையறுவ தெக்காலம். (4)

காண்கின்ற தெல்லாங் கலந்த சுகபாகம்
பூண்கின்ற போதம் புரையறுவ தெக்காலம். (5)

மூன்றுபட நின்ற வுணர்வே யுணர்வாகி
யொன்றுபடா நின்று வினைவழிவ தெக்காலம். (6)

ஆரா வமுத மனையா தருந்தியதிற்
பராம னிறகப் பெறுவதினி யெக்காலம். (7)

ஓரொருகால் வாதனையி லுற்றழுந்தல் விட்டறிவிற்
பூரணமேல் கொண்டு பொருந்துவது மெக்காலம் (8)

காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு மாய்நிற்கும்
வீண்பாவந் தீர விளைவதினி யெக்காலம். (9)

அருவு முருவு மருவுருவு மான
வொருமை யொழிந்திடத்தி லுறுவதுவு மெக்காலம். (10)

நீங்காத பேரறிவில் நீங்காம லொன்றுபட்டு
வாங்காரந் தீர வடங்குவது மெக்காலம். (11)

அந்த வறிவகன்றே யானந்த மாலேறித்
தொந்தப பவத்திற் றுரிசறுவ தெக்காலம். (12)

கேட்டதுவு மன்றியே கேளாம லன்றியே
விட்டிடலொரு தன்மை விளைவதினி யெக்காலம். (13)

சொல்லரிய வின்பச் சுகமே சுகமாக
வெல்லையற வொன்றா யிருப்பதினி யெக்காலம். (14)

தாயுமான முகத் தடுமாற்றந் தீருவதற்
சாயப் பறிவி லழுந்துவது மெக்காலம். (15)

இந்நாள் நிரையத் திருந்த துயர் தீர
உன்று வொளியி லொளிப்பதினி யெக்காலம். (16)

ஆக்க மளவற்ற வறிவே யறிவாக
நீக்கமற நின்று நிலையழிவ தெக்காலம். (17)

அஞ்செழுத்தும்வெண்ணீறு மன்பர்திரு வேடமுமென்
நெஞ்சழுந்த மாக நிலைபெறுவ தெக்காலம். (18)

அண்ணல்திருக் கோயிற் கடிமைத் திறமல்லா
தெண்ணுங் கரும மிழிவதினி யெக்காலம். (19)

வேறு.

நாக்கற்ற சோதியினுள்ளே சொல்லற நின்று சுகித்தே
நீக்கற றிருப்பதெந் நாளே நித்தத் திருப்பதெந்நாளே

ஒருணா வான வுணர்வுக் குள்ளுணர் வாக வுணர்ந்தே
பார்முதல்நாத மொழியப் பண்பற் றிருப்பதெந்நாளே.

ஆரணன் வேத மறியா வண்ணல் நிறைவே நிறைவாய்ப்
பூரண ஞர்நிறை வாயே போதத்தில் நிற்பதெந்நாளே

கண்டது கண்டது கண்டே விண்டது விண்டது விண்டே
கொண்டது கொண்டது கொண்டே கொள்கையிறப்பதெந்நாளே.

டுதல் வாடுத லின்றே கூடுந ரொன்றென நின்றே
ஆடுதல் பாடுத லாயே யாய்விடு நாளினி யேதோ. (24)

வேறு

என்று மெண்ணிப் பிரியா மெய்ப்பிரா னுறவணி நறவி
சொன்னு படகினை யேறப் புணைபுரிவ சிப்லையோ. (௧)

அன்பு குருபாதத் துரா தாடசெய்யத் துரைத்து
பூண்ட புமைவழியைப் போசதா ளிலைக்கேயோ (௨)

எண்ட வடப்பொல்லாப் பாரஞ்சொ னைதயிர்க்கள
சண்ட பிணைவச் கண்டசணிப் பைசகப்பரசுபாகிகளோமோ.

சாறுந சணைவாக் தீயபிரா னென்ன நமிப்பா
குாறுந சணிப்பகருக்க ஏறிப்பிடு நாடிரோமோ. (௪)

இனமாவு மெகதை யபீஷையடிப்ப செலைமை
நினறுதபாதீர தினறுவிடு நாமோரோசா (௫)

பொல்லாத பூதப் புலாறுடம்பிற் பாமை
கல்லாத வணப்பிற எலைதிருக்கு நாமோமோ (௬)

பொய்த்தக்க அவத்தினை யகசடக்கப் போர்ப்பட
மெய்த்தக்க ஆவசதில விழித்துவி நாளோமோ. (௭)

ஐயோ விதியை வருந்தசாக கோசர்ப்ப
மெய்யோ விழிக்க விரவிபிடு நாளோமோ (௮)

கூறரிய மெய்ஞ்ஞானங் கொண்டபடி கொண்டதன்றி
யாறி யிருந்தங் களிப்பிக்கு நாளேதோ. (33)

மாயப் பிறப்பில் வருந்து மயக்கமறக்
ஆய வருட்பரப்பில் தோய்ந்துவிடு நாளேதோ. (34)

பரிபூரணக் கண்ணிற் பாலமுத முண்டே
இரவுபகல் தேசிகனைப் பொருந்திவிடு நாளேதோ. (35)

ஒன்றாக ஞானக் குருபரனார் சொற்கேட்டுப்
பொன்றாத வானந்தமயப் போதகவிடு நாளேதோ. (36)

ஊனமிலா வின்ப வுருவே யுருவாகி
யானெனது நீங்கி யிருந்துவிடு நாளேதோ. (37)

பெருக வந்தருளுந் தேசிகர்க்குப் பினைவந்து
பாரு மனத்துயர பாறிவிடு நாளேதோ (38)

என்னுயங் குருநாத னிட்டபணி செய்துமிக
நின்றபடி நில்லாத நெகிழ்ந்துவிடு நாளேதோ. (39)

ஆசையென மற்ற வழியே யறிவொழிந்து
பேசநினைவில்லா மாகி யிருந்துவிடு நாளேதோ. (40)

அவனை யவனா யதுவைக் கருதிச்
சிவனை மறந்திருக்குஞ் சிந்தைவிடு நாளேதோ. (41)

நீதிலா வின்பச் சிவமே சிவமான
போதெல்லாங் காணப் புலப்படுவ தெக்காலம். (12

காணரிய ஞானக் கடலே யிடமாகத்
தானுமே தேசிகனே தந்தருள வேணுமே (13

முன்புவினை யெப்போது முட்டாத தந்தபோ
லன்புடனே யின்ப மருந்தருந்து நாளென்றோ. (14

வேறு நினையாமல் வீட்டின்பத் தின்புறவே
நாடி யிருந்திருக்க வண்ணமே தந்தருளே. (15

முத்திதாய்வா ரிந்த வுலகை மறந்துணர்வி
னித்தமாய் நின்றுவிட நின்மலனே தந்தருளே. (16

அவயோகந் தன்னி லாசையற வென்றுஞ்
சிவயோகத் தானந்தத் தேசிகனே தந்தருளே. (17

சத்திய ஞானமானந் தானந்த தாணுவே
நித்தமாய நின்றுவிட நின்மலனே தந்தருளே. (18

வருகாலத்திரங்கல் - முற்றும்.



[illegible]

அநுபூதிவிளக்கம்.

[illegible] முறையாக
[illegible] போற்றுவாம் (1)

[illegible]
[illegible] (2)

[illegible]
[illegible] அநுபூதி கூறுவாம் (3)

[illegible]
[illegible] செப்பியவா செப்புவாம் (4)

[illegible]
[illegible] மெய்ப்பொருளைக் கூறுவாம். (5)

[illegible]
[illegible] அநுபூதி கூறுவாம். (6)

[illegible]
[illegible] அநுபூதி கூறுவாம். (7)

[illegible]
[illegible] விருத்தத்தே. (8)

சரியை முதனாற் கிரியை யாகமுப யோகந்
தொருமை தனிவின்றருளு முறையாவ நுபூதியமே (9

கேட்ட லுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவு
சேட்டமறாத் தேடுஞ் சிவானுபவஞ் செப்புவாம். (10

அண்டபிண்டம் கண்டேன் அருங்கருவி கண்டாலே
கண்டவுயிர் கண்டாலென் காரணவுயிர காணாதார். (11

மண்ணீ ரனலகால் வான மெண்சுடர்கள் மன்னுயிர்க
ளெண்ணீர்மை யானா சிவனுருவ மல்லவோ. (12

எட்டுருவு மென்று மிறையுருவ மென்னுமது
சிட்டர் மறையுஞ் சிவாகமுஞ் செப்பியதே. (13

ஆதலா லண்ண லறிவு நினை வொழிந்திங்
கேதுநாம் வேறென் றியலுமது கவியே. (14

எல்லா மிறையுருவென் றிப்படியே காண்பதன்றி
நில்லா விடமிதென்று நீக்கநிலை கூடுமோ. (15

சுருக்கம் விரித்தலறச் சோதி நிறைவிற்
பெருக்கவிழித் தாலலது பேரின்பங் கூடுமோ. (16

எங்கே யிறையைநா மெட்டினையும் விட்டதுதா
னங்கே யழுந்தி லநுபூதி கூடுமே. (17

இந்திரியக் கோட்டை யியைந்த விடயத்தி
லநுகரித்த போது மவனிடமே யல்லவோ. (18)

பறு மறுதியுடன் பற்றிய பயின்றறு
றுபவிட மெந்தை யுணர்வுருவே யல்லவோ. (19)

ஆசை யறவியற்ற லானவிட மெல்லாநம்
பரமிட மல்லா தெமக்கோரிட மில்லையே. (20)

ஞானறவிட மெல்லாஞ் சிவமென்றல மானதபோ
ஒவ்வுறவுயிர் நின்ற சிவனிறைவி னல்லவோ. (21)

ஒன்றோ விறையுயிருக் கிப்படியோ நின்றநிலை
பொன்று வொழியா வொருவ னுறவெமக்கே. (22)

நினைப்பு மறப்புமற்ற நின்மலனே யல்லாமற்
மினைத்துணையு மில்லையென்று தெய்வமறை கூறியதே.

இனியகலவ தெங்கே யிருவினையா லெங்குந்
தனியகல னன்றருளுந் தப்பிரான் றானலவோ (24)

வெறுப்பு விருப்பென்று வேறுரைத்தா லெந்தை
யுறுபயிற்குறையாதோ வுணர்வுடையோர் சொல்லுவரே.

வேண்டலும்வேண் டாமலுமாம் வினையும் வினைப்பயனு
மாண்டதையோ டுற்ற வநுபூதி யானதே. (26)

பாசப் பரப்பும் பசுவும் பராபரையு
மீசனலா தொன்று மினிப்பிறக்க வில்லையோ. (27)

ஈண்ட வளப்புக் கிலவணமே யானதுபோற்
பூண்ட வுயிரெல்லாம் பொருளா யிருந்ததே. (28)

எரிசுத்தங் கொண்ட விரும்புபோ லெங்கும்
பரிசுத்த மான பராபரமே யானதே. (29)

பேதையார் தாளிணைகள் புன்றலைமேல் வைப்பளவில்
வேதையா யெங்கும் விமலனரு ளானதே. (30)

பார்த்தே னுலகப் பரப்பெல்லாம் பார்ப்பளவிற்
பேய்த்தேர் போ லில்லையாய்ப் பேரறிவே கண்டனமே.

பொய்யெங்கே மெய்யெங்கே போதம் பொறியெங்கே
மையெங்கே யெங்கு மலர்ந்த சுகமொழிந்தே. (32)

மண்முதலாம் பூத வகுப்படைய வென்னறிவோ
வண்ண லருளே யடங்க விழுங்கியதே. (33)

எண்ணரிய பூதமெலா மென்னுடைய தம்பிரான்
கண்ணி லடங்கியிடக் காணவரி தானதே. (34)

வானடையத் துற்றவிருள் வானொளித்த நேரம்போ
லான பரமசுக மல்லா தடங்கியதே. (35)

ஆநந்தஞான காந்தமணி யொளிதந்ததுபோல்
வந்தவருட் சோதியந்தில் வையமொளிர்ந்ததுவே. (36)

மௌனமய குருட னிருட்டாக திரவி வர
மாய நிலைபோல நிறைவொழிந்து கண்டிலமே. (37)

அனந்தோ யிறைக்கடிமை யையமில்லை யையமில்லை
மென்றோ பறைமொழிசற கின்றோ யிசைந்தனமே(38)

சோர சிவபாகிர சிந்தித்தார் சிந்தித்தார்
மனத்தி னுளளே பொருந்தினவ ரல்லவோ. (39)

விட்டுவிடு பேதினியில் வேறு பொருள்கோடல
விட்டினவ ரானந்தக கேள்வா தமக் கல்லவோ. (40)

சதுர திசையும் பதினுலகை மெங்குஞ்
சந்திக கரைபுரளுஞ சாகரமே யல்லவோ (41)

இந்திர சால மிடுமளவு பெய்யாகி
சாபபூ வானதுபோ லவனிநமக் கானதுவே. (42)

பேயததிரிவு மிதூப புவியென் றுணர்வளவின்
மயத்திரிவு நீர வெளியா யிருந்ததே. (43)

அசசமறுத் தெல்லா மருளாகித தந்தருளி
லைவசசவரு ளானந்த வாரிதியி லாழினமே. (44)

ஞாதனுட னொன்று முணர்ந்த வினியவையு
மேதுங் கருதாமை யேகாந்த மாய்விடுமோ. (45)

செய்தவங்க ளாலேநந் தேசிகனார் வந்தருள
வெய்துமின்பம்போது மினித்தவங்கள் வேணுமோ (46)

பருவங் குறித்திப் பாரமொளி வந்திவ்
வுருவந் தரித்தா லொருதவந் தான வேணுமோ. (47)

செய்தற் கரியதவஞ் செய்தாற்பி னல்லவோ
வெய்தற் கரியபிரா னெம்போல வந்ததுவே. (48)

பார்த்தும் பரிசித்தும் பாதுகைகள் சூடியென்று
மேத்துகுரு நாதர்தம்மை யின்பருவ மீதென்றே. (49)

கச்சி நகரிலன்று கம்பர்தமைக் காரிகையா
ளிச்சித்துப் பூசித்தா ளெடுத்ததிரு மேனியன்றோ. (50)

அருளா வடுதுறையி லாவுருவா யம்மை
யிருடீரப் பூசித்தா ளெடுத்ததிரு மேனியன்றோ. (51)

கண்ணனிரு கண்ணிடந்துங் கண்ணப்பர் கண்ணிடந்து
மெண்ணமறப் பூசித்தா ரெடுத்ததிருமேனியன்றோ. 52

வேதனுட னிந்திரனு மேம்பட்ட தேவர்களு
மேதமறப் பூசித்தா ரெடுத்ததிரு மேனியன்றோ. (53)

கந்தன் கணபதியுங் கற்ற விருடிகளும்
எந்தையெனப் பூசித்தா ரெடுத்ததிரு மேனியன்றே.

கொண்டவடி வெல்லாங் குருவடிவே யென்றென்று
தொண்டர்பலர் பூசித்தார் சொல்ல முடியாதே. (55)

எவ்வடிவு மிந்த விறைவடிவே யாதலினா
லிவ்வடிவு பூசிக்க யாமுரைக்க வேணுமே. (56)

ஓருருவங் கொண்டருளுந் தேசிகன்செம் மேனிபோ
லோருருவி னின்றிங் குணரா துணர்த்தினனே. (57)

வந்த குருவடிவை வந்தித்துப் பூசித்துக்
கந்த சிவானுபவந் தானருந்தப் பெற்றனமே. (58)

அருந்த வருந்த வமையா தமுதந்
தருஞ்சமியையப் பாவியேன் றானுகக் கொள்ளுவதே (59)

ஆயவிய மில்லா வகண்டபரி பூரணத்தே
தூய குருவுருவந் தோன்றுமற் றோன்றியதே. (60)

தாய்முலைவாய் வைத்திரங்கத் தன்னியமவந் தூறுவபோ
றாயதுணைத் தாளழுந்தத் தூயசுகந் தோன்றுவதே.

தோன்றாமை தோன்றியதிற் சுகமே சுகமாகித்
தோன்றாமை தோன்றியதிற் றோய்ந்து களிந்தனமே.

சைவப் பெருமான் றவராச ராசனா
மையவருள் மெய்கண்டான பாதமலர் வாழியவே (63)

நங்கைநகர் மெய்கண்டான் காதகமலரு சென்னியின்மேற்
றங்கவிரு ணீங்கியருட் டாளுந் தபோதனரே. (64)

வாழி திருநீறு வாழிதிரு வஞ்செழுத்து
வாழி சிவாலயங்கள் வாழிதிரு வேடமே. (65)

அநுபூதிவிளக்கம் - முற்றும்



ஐந்தாவது,
தாலாட்டு.

உலகுபுகழ் மெய்கண்டா னுண்மைமருவு முசாக்கிரர்
பலவாணாநந்த சிற்றம்பலநாடித் தேசிகனே. (1)

வாயே மனமே வரையற்ற வோருரையா
னீயேநா னென்று நிலைமை யளித்தானே. (2)

தெய்வதீ ராடிச் சிவாலயங்கள் கைதொழுது
மெய்வருந்தா தப்பாநீ நானென்ற வேதியனே. (3)

கையில்விறகேறாமல் கண்சிமிட்டி நோகாம
லையமுளத் தாக்காம லாண்டபரி பூரணனே. (4)

பட்டினி விட்டுப் பலநாள் வருந்தாமே
யிட்ட மெனக்கு முனக்குமென்ற வீசுரனே. (5)

கோயில்வலம் வந்துபத கோகனகம் வாடாதே
நேயவருள் வெள்ளம் நிறைவித்த வாண்டகையோ. (6)

பேராதர வாகப் பேரறிவு போதித்த
சீராசைச் சிற்றம பலநாடித் தேசிகனே. (7)

நீயறிவா னந்தநா மிதனை நீக்கியதே
காயவழி வென்றருளாற் காட்டுங் கருணையனே. (8)

னைவெறு நமூலா யுய சனறசாமூ மைமமுகமு
ா ரனைவாபகுப காளுை வொர மெ ானிசது வகதாமே (9)

ாகைம படிந்தாக தலைவெவசபுக மகாளுவளைதய
தசரீனை யாசருனாக காடேப கருணையமேரு. (10)

கயபாயு போதமறுச காசினியோா ஞாலவிடடு
யபாளை சமாா விதம்வோாற நாயகமோ. (11)

மைமவுபு மைசமசாபூழிவு மானயாவு மையமிவும
பாயயமே யென்றிகணப போதிசக புண்ணியமேரு

போா வழிமயலளாம போசா தொழ யெதிரது
ாளாவளைசகுமபெருமை தாச தவ யயமேரு (1[illegible])

ாகசிற சரமதுவாயாபாரா விழிலுளசா
யாரசகு யளாயபாயி வாாளசாக வாரிதிமோய (1[illegible])

அருகமலத தாலு பழிவா யிருந்தவெனை
அருசமல சேகி யழியாமல வைதாமேரு (1[illegible])

மேபாகப படுகுல பிராகதிஞுமே முமப ெபு ா
தவதப பொருண்முடிமெ கேமயன்ற வேதியமேரு. (1[illegible])

சாபுறவ மேனத திகழு மேணுளா
மூரதுவாயக கொண்டிருநதெயனனை யொழித்தமேரு

சோலையாக் தொண்டரிடஞ் சேரும் பவக்கடலைப்
பாலையான் மாற்றிப் பதியாக்கி வைத்தானே. (18)

பதிக்குப் பதியாய்ப் பரத்துக்கும் பரமாய்
விதிக்கும் விதியாய் விதிக்கும் பெருமானே (19)

தேவர் முனிவர் சித்தர்கள் தேர்மறையோர்
மூவரவர்க் கப்பாலு மூவா முழுமுதலே. (20)

எங்கெங்குந் தானாகி யென்போ லுருக்கொண்டு
பங்கும் பிறவிதனை மாற்றவந்த வள்ளலே (21)

தானே வணங்கத் தலையாம் பதங்கொடுக்கும்
வேதாகாச சிற்றம்பல நாடி விநாயகனே (22)

நாணமறக் கரியானே கண்டன் றுடையானே
தாணுவே சங்கரனே சச்சிதா னந்தனே. (23)

மேலுக்கு மேலாய விருப்பாய வெறுப்பாகி
நாலுக்கு மாண்பரிய நுண்ணியனே வையாதீ. (24)

சொன்னை கமத்துறு சுருதிக்கு மெட்டாத
தன்னைத் தனமனக்குத் தந்த தனிநாடரோ. (25)

அலயங்கள் தேடி யலையாதே யுள்ளிடத்தே
சாலவுநீங் காதிருப்போனே சத்தியமீ தென்றாரோ. (26)

மானங் குலைந்து மதியழிந்து நான்கெட்டால்
நானென்று நீயென் றிரண்டில்லை யென்றாரோ. (27)

பேறிழ் மின்பம் பிணிமூப்புச் சாக்காட்டல்
ஏழுங் கருவி லமைந்ததனைக் கென்றாரோ. (28)

சாங்கி மதத்தாலுஞ் சமய மதத்தாலுஞ்
சோதிலா ஞானத்தைக் கூடவரி தென்றாரோ. (29)

வேடுவன்வாய்ப்பட்ட புழு வேட்டுவனாந் தன்மைபோல
நாட்டமேல் வைக்கிலே நற்சிவமே யென்றாரோ. (30)

ஐயமு முயிரு முளமு முணர்வுங்
தனையிலன்றிப் போகத்தாற் காணவரி தென்றாரோ. 31

கண்டார்க்குக் கண்டநாயக காணார்க்குக் காணநாயகங்
கொண்டார் கருக் கொண்ட குழியாகி நின்றாரோ. (32)

அண்டாண்ட பூரணமா யபாலைக் கபாலாய்க்
கொண்டுமதிற் கொண்டறியாக் கொற்றவனைச் சொன்னாரோ.
எல்லா வுயிரு மெனதுருவே யென்றுரைத்து
நல்லோர் மனத்தில் நடித்தானைச் சொன்னாரோ. (33)

உள்ள வழியெல்லாங் கமலவழித் திறமட்டி
உள்ள மழுக்கறுத்த வொண்பொருளைச் சொன்னாரோ

முக்குயரு மூவுயிரு முப்பாழுங் காட்டியெனை
யக்துவிந் தாக்கு மருளுருவைச் சொன்னாரார். (36)

ஆணாகிப் பெண்ணா யலியா யதல்லவொத்த
கோணைத் துணையான சோதியனைச் சொன்னாரார். (37)

ஒப்பிலா ஞான வுருவே யுருவாக
முப்புரத்தைச் சுட்டழித்த முக்கணனைச் சொன்னாரார்.

உண்டி யுறக்க மொழியாப் பிணிமூப்புக
கொண்டு மகிழ்ந்த குணக்கடலைச் சொன்னாரார். (39)

மேலாந் திணையிரண்டாய மெய்யா யுயிர்க்குயிராய
நாளைய பராபரமாம நாயகனைச் சொன்னாரார். (40)

உபாயங்கட வெல்லா மொன்றாகி நின்றவொளி
யுள்ளங் குதிகொண் டொருமுதலாய் நின்றோரா. 41)

செய்வினைக ளெல்லாந் திருவினைகள் தாமாக்கி
யுய்யவெனை யாண்டருளு முத்தனைச் சொன்னாரார்.

வன்னம் புவனம்வருந் தத்துவிதமாஞ் சலையென்
றன்னுமிட மென்னிடமென் றாருருவைச் சொன்னாரா

அண்டபிண்டமுள்ள மருளுருவே கோயிலெனக்
கொண்டொருவ ருமறியாக் கொற்றவனைச் சொன்னாரார்.

இன்னவடி வின்னநிற மின்னபடி யென்றறியா
னானு மடத்தி லுதித்தானைச் சொன்னார். (45)

பார்த்து நினைத்தும் பரிசித்தும் பாவமறுத்
தீக்ஷைதனை வைக்கொடுத்த வெங்கோனைச் சொன்னார்.

சிக்கையிலுற் றோர்க்குஞ் சிவலோக வீடளித்துப
பந்த மகற்றும் பராபரனைச் சொன்னார். (47)

பேதாதி பேதமாய்ப் பேரறிவா யொருமையே
யாதார மாகுமென்ற வற்புதனைச் சொன்னார் (48)

மூன்றுவினை கண்டார்க்கு முற்றுமல கெடவகற்றித்
தோன்றுவினை பாற்றுஞ் சுகோதயரோ கண்வளரீர். (49)

மெய்ஞ்ஞானக் கண்வளர மெய்கண்டான மெய்வளர
வஞ்ஞானக் கண்ணகற்று மையர் திருக் கண்வளரீர்.

சுத்த மசுத்தஞ் சுகமசுக மானந்த
நித்த மநித்தமென நின்றோரே கண்வளரீர். (51

முத்தொழிலாற் செய்த முறையுலகெ லாம்வளர
வத்தரே சீராசை யையரே கண்வளரீர். (52

வையம் வளர மறையோர் தொழில்வளர
மெய்யும் வளர வருள் மேகமே கண்வளரீர். (53)

சாலநூக கடங்கார சுகாதீத மெய்ப்பொருளே
காலை லறு நதாண்ட வாதியே கண்வளரீர். (54)

இனப மிரண்டு மிபற்றியதற இனபமுமா
பண்பு நிறைந்த வருட்கடலே கண்வளரீர். (55)

மையத்தில வீழாமற றாபாதத்தி லாழாட
மையக் கருணைதந்த வாதியே கண்வளரீர். (56)

சத்திமல மைந்துந் தருவதுநாம் போக்குதற்கு
முத்தியுநா மென்ற முழுமுதலே கண்வளரீர். (57)

ழுலகு முற்றும் ஒளியொளியாய் நின்றபதம்
பாழவடி யேனமுனனே வந்து கடந்தாரோ. (58)

வதாவு மாறும விளம்புதற்கு மெட்டாத
போதானந் தசொரூபப் புண்ணியரீயென்றாரோ.(59)

கண்ணுலும் காணைக் கருத்துக்கு மெட்டாதா
ணாடி லுண்டு முததமரே கண்வளரீர். (60)

ஓங்காரக் கள்ளொளியி னுள்ளே தனைக்காட்டி
நீங்காம றாங்கவைத்த நிட்களனை வாழியரோ. (61)
ஏகதாரக சித்த விகற்பமது திரவுடல்
பூதத்தை மொன்று முழுமுதலை கண்வளரா. (62)
ஒன்றிரண்டு மூன்றுற் றொருநாலொ டைந்தொன்பா
னின்றதெல்லாந் தானாகி நின்றாரே நன்மையார். (63)

தாலாட்டு - முற்றும்.



ஆறாவது,

வெண்பா.



சேயபுகழ் மேனியனைத் தேவர்தொழுங் கோவை
வாயடருளும் பொய்யா விநாயகனை—வையமெலாந்
தாங்குதானை யார்க்கு மிலையானைக் காதற்கு
ஏற்குதானை நாவே மொழி.

என்னை வினையறியா யாறு மதுவறியேன்
முன்னைவினை கூடல் மொழிந்தருளா—வென்னைத்
திருவார் பொழிற்காழிச் சிற்றம் பலவனா
ருருவா றுநாவென்றான் றான். (1)

கண்ணுக்குக் கண்காட்டா காட்டுங் கதிரொளிபோல்
பெண்ணுக்குப் பெணவிளையாப் பேரின்ப—மெண்ணெணுக்கச்
சொல்லா ருயிர்க்குயிராய்த * தோய்ந்துணர்த்தி யின்பருத்த
வல்லான்சிற் றம்பலவன் வந்து. (2)

சென்றறிய வேண்டாவே சேராமை வேண்டாவே
யொன்றுபட வேண்டாவே யுள்ளத்தே—நின்றநிலை
கண்டாயே யெங்குங் கதிரொளிகண் காயமெலா
முண்டான தன்மைபோ லுற்று. (3)

* தோய்ந்தருந்தி யென்றும் பாடம்.

உற்றுணர்வுந் தூன்னே யொழியா வுணர்வுணர்ந்த
பெற்றனையே யெவ்வுயிர்க்கும் பேற்றினை—மற்றுமுன்
மாண்டதே பாரப்பளவின் மாளாச் சிறைவுமைமை
பூண்டதே யென்றே புகல (1)

தங்களைநா மின்பத் தடங்கடலின் மூழ்குவித்த
மங்குலைக் கேட் மறைப்பித் தீரா—மங்குலெவ
பாராதே வாரணையால வந்தாரே யாமாகிற்
பாராதே பார் பரம. (5)

பக்கமொழி கீழ்மேலு மில்லாப் பராபரத்தை
யொக்க நிறுத்தியதி லொன்றாகி—மிக்க
சிவபோக நல்கினுஞ் சிற்றம் பலவ
னவபோகந் செலலா வனைத்து. (6)

கருவி கரணமுடனே கைகலந்து நின்று
மருவும் விடயமெல்லாம் வாங்கி—யருகாமல்
சீவிப்பாய் நீயென்றான் சிற்றம் பலநாடி
பாவித்தே பாராமற் பார்த்து. (7)

கருவி கரணங்கள் கண்டுணர மாட்டா
மருவியதி லான்மாவும் வாரா—குருபரன்றான்

சிற்றம் பலநாடி தென்கா ழியர்பெருமான்
உற்றுணர்த்தாப் போதென் றுணா. (8)

அட்ட வராகமுட னைந்துவச னத்தகளு
மொட்டு முயிர்ச்செயல்க ளோரிரண்டும்—விட்டகலச்
சிந்தா மணியான சிற்றம் பலநாடி
தந்தான்பொற் செங்கமலத் தாள். (9)

வாசகாதி நான்கும் வருங்குணங்க ளொன்பானும்
போக்காமூன் றேடணையும் போனதே—நோக்கி
யிணங்கரிய சிற்றம் பலநாடி தாளை
வணங்கிநினைத் தெப்பொழுதும் வாழ்த்து. (10)

ஆசையங்க ளைந்துமூன் றுறும் வியாதிகளுந்
தேசுமல மைந்துஞ் செயகோச—மோசைதருந்
நாதுக்க ளேழுந் தணத்தான்சிற் றம்பலவன்
மேதக்க காழிநகர் வேந்து. (11)

மண்டலங்கள் மூன்று மருவுமா றாதாரங்
கொண்டு திரியுடம்பின் கூறிரண்டும்—விண்டகலச்
சிந்தா மணியான சிற்றம் பலநாடி
தந்தான்பொற் செங்கமலத் தாள். (12)

கரையிறந்த பேரறிவு கண்டது நீங்கி
யுரையிறந்த வானந்த முண்டு—திரையிறந்த
வாரிதிபோ னிலலென்று வைத்தான்சிற் றம்பலவ
னருதவு வாரிவன்போ லாங்கு. (13)

நான்னை மறைத்தவிரு ளெங்கேனும் போனதோ
நின்னருளிற் கெட்டதோ நின்றதோ—முன்னைத்
தவகுருவே சிற்றம் பலவனே சண்மைச்
சிவகுருவே நாயேற்குச் செப்பு. (14)

அல்லாா பொழிற்காழி யம்பலவன் றன்வார்த்தை
யெல்லாஞ் சிவமா யிருந்ததே—தொல்லாழி
வெள்ளம பரந்தக்கால் வேறுபுனல் தோன்றுமோ
வுள்ளஞ் சிவத்தே யொளித்து. (15)

குலாலன் றிகிரி சுழல்வண்டு கொள்ளி
யுலாவுங் கறங்குவரி யொத்தே—மலாதியா
லாரா வடியே னுலகி லலம்வருகை
பாராய் திருவேகம் பா. (16)

மாதாவா மாயை யரித்தாள் மரித்திடத்தே
பேதமிலாப் போதன் பிறநதானே—யாதலா
லாசூசந் தானிரண்டு மானேனென் பூசிக்கத்
தேசாசிற் றம்பலவா செப்பு. (17)

வேலையலை போலெனக்கு மேதினியில் வாதனைநோய்
வேலை யலையெறிந்து விட்டதே—வேலைபோல்
நித்திய கோசரத்தி னில்லென்றான் காழிநக
ரத்தன்சிற் றம்பலவ னாங்கு. (18)

பாசமுங் காமப் பதியிற் கலவாம
லாசறுநன் முத்தியெனக் காக்கினான்—தேசிகா கோன
செங்கேல் வயற்காழிச் சிற்றம் பலநாடி
நன்னெறிக் குண்டோ தாம். (19)

காய மவரவாய்க் காணுங் கருத்தொழிந்து
காயமொழிந் தான்மாவைக் காணேனே—நாயேனை
தென்புகலித் தேசிகனே சிற்றம் பலவனே
யென்புகல்வே னென்செய்கே னியான். (20)

காயமொழிந் தான்மாவைக் கண்ட முறைமைபோற்
றாயவரு டோனறவுயிர் தோன்றும—லேயதற்குத்
தந்தருள்வன் சிற்றம் பலநாடி சண்டையாகோன்
வந்தருளப் போனவா மாண்டு. (21)

உற்றவுயிர் தோனறும ஹுள்ளுணர்வு தோன்றுவபோற்
பெறறவரு டோன்றுமற் பேரின்ப—முற்றுமிகக்
காட்டினான் சிற்றம் பலநாடி காழியர்கோன்
வாட்டினான் வாதியா மல். (22)

காணு மிதத்தா லுங்கா ணினைந்து பார்ப்பளவி
லாறு வறிவழி யல்லாது—வாறுமெந்
தென்புகலிச் சிற்றம் பலநாடி சோத்தளித்த
வின்பருந்த வாரா தெமக்கு. (23)

சிற்றம் பலநாடி சிபாத வல்லபங்கள்
சொறுமிகழும் பைங்கிளியே சொல்லக்கேளுற் றவருங்
காணாது காட்டியது காணாது காட்டியது
காணாது காட்டியது காண். (24)

ஆணவமே போமாயை போமான விருவினைபோம
காணவரு மாமாயை காணும்போம—வேறுபுரத்
தேசிகர்கோன் சிற்றம் பலநாடி சேவடியைப்
பூசைசெய யாம்பூண்ட போது. (25)

ஆற்றவரி தாற்றவரி தையகோ வாணவநோய்
வேற்று விகார மிகக்கொடிது—மாற்றுதற்குத்
தேசிகர்கோ னென்பளவிற் சிற்றம் பலநாடி
மாசிதுவோ வென்றுரைத்தான் வந்து. (26)

தேனேயுங் கண்மலராற் சிற்றம் பலநாடி
தானேதன் பேரின்பந் தந்தானே—யூனே
நெருங்கியக்கா லல்லாது நீளமிழ்தந் தாரீர்
கரும்பினங்கா ளுங்களுக்கென் காண். (27)

அன்றிலே யின்ப வகண்டபரி பூரணத்தி
லொன்றிலே யென்னை யொழித்தவரார்—சென்றுமதிச்
சேவாகுங் காழிநகாச் சிற்றம் பலநாடி
காவாமற் காத்தருள்வோர்ன் காண். (28)

கான மயிலே கடல்சூழ்ந்த காழிநகாத்
தேனவிழ்தார் சிற்றம பலநாடி—பானிடரி
லென்றுட லாடாதே யின்பந் திகழ்மன்றி
லன்றாடி னானென்றே யாடு. (29)

பலவின் சுளையருந்தும் பைங்கிளியே யென்றன்
மலவன் கிளையறுக்க வல்லான்—றலைமுழுதுஞ்
சென்று தொழுங்காழிச் சிற்றம் பலநாடி
யென்றொருவன் காணு மிதற்கு. (30)

தேடும் பொருளுடனே சேமித்து விட்டனரோ
நாடுந்தம் மூர்பேரு நானிலத்தோர்—வீடறிஞர்
சேமமே பொற்காழிச் சிற்றம் பலநாடி
நாமமே கேட்பதல்லால் நாம். (31)

சர்க்கரையென் றுவிரதந் தானுமோ நெஞ்சமே
சிற்பரன்சிற் றம்பலவன் றேசிகர்கோன்—நற்பதத்து
ணில்லாயே யாகில் நெடுநாளே நீகற்ற
சொல்லாலே யாமோ சுகம். (32)

நூல்கொண் டுணர்வனவும் நண்ணுணர்வாற் சொல்வனவும்
பால்கொண்டு விற்பான் பயன்போலுங்—காலகொண்
டறியாமை மாற்றுசிற் றம்பலவன் வைத்த
நெறியே நிலையாக நில். (33)

என்பிறவித் * துன்பறுப்ப தென்றேசிற் றம்பலவா
நன்பிறவி யென்போல நண்ணினா—பின்புறவே
பொய்யாத நால்வர்க்கும் போதித்த மோனவுரைக்
கையா கருணா கரா. (34)

விகற்பமிலா ஞானம் விமலனார் ஞானம்
விகற்பமெலா மிக்கசடந் தானும்—விகற்பமெலாம்
என்னாலே யென்றா னெழிலார்சிற் றம்பலவ
னுன்னாலே யென்றுரைத்தே னுற்று. (35)

போக்குவர வில்லைப் புனிதற்கு மாயைக்கும்
போக்குவரவாருயிர்க்கோபோற்றென்றேன்போக்குவர
வங்கங்கே யென்றா னருளாற் சிற்றம்பலவ
னிங்கிங்கே யென்றுரைத்தே னியான். (36)

இன்றகன்று நின்றீ ரினிக்கூட வாரீரே
யன்றகலா மும்மலங்க ளல்லவோ—துன்றுபவந்

* துன்பகற்றல் என்றும் பாடம்.

பேரத் தருளுஞ் சிற்றம் பலநாடி காழியர்கோன்
பாரத் தருளாக கண்டெய்யப் பட்டு. (37)

யானெனது நீக்கி யிறைபணியி லொன்றுநகி
யானெனது நீங்கா திருந்திடுவன்—யானென்று
ஆங்கார மாய போற்றுஞ் *கண்டெய்சசிற் றம்பலவன்
பாங்காமற் காத்தாண்ட வாறு. (38)

உண்டுவது முன்றுமேல யுமது தொழிந்துதில்லை
மன்றுவது முன்றுமேல மற்றிலலை—யென்னுமது
நாவழியேன் சிற்றம் பலநாடி நானெனநீ
தாவழியாமை யாரறிவார் தான். (39)

இறந்துபிறந் தெய்த்த வினைப்பொழிக்க வென்றே
பிறந்துலகில் வந்தாய் பிரானே—யறந்திகழும்
போதா புராதனனே பூரணனே பூம்புகலி
நாதாசிற் றம்பலவா நான். (40)

மைந்தா வெனவழைத்து மாயா வுடம்பகற்ற
விந்தா வறிவென் றிசைவித்தா—யெந்தாயே
யாதார மேதென்றே னுங்கறிவே தானென்றான்
றாதார் மலர்த்தாள்க டந்து. (41)

---

* கண்டுய்யப்பண்டு என்றும் பாடம்.

ஆண்டகுரு சிற்றம் பலவா வடியேற்காய்
மீண்டு மெழுந்தருள வேண்டாவோ—நீண்டமால்
ஆரணனுங் காணாத வானந்த வாரிதியைப்
பூரணமாய வையாத போது. (42)

